திருவள்ளுவர் ஆண்டு 2040

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 52 பகுதி : 12

அக் - 09

விலை ரூ. 10/-

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

பாண்டித்துரைத்தேவர் பாடிய காவடிச்சிந்து

முருகக் கடவுள் துதி

நஞ்சார் திருக்களத்துப் பஞ்சான னத்தவர்க்கு
நனிமகிழ் வைத்தரு தனையனெனத் திகழ்
நாதனே—நாளும்
புனித மனத்தவ ரினிது வழுத்திய போதனே
அஞ்சா விறற்புயக்ர வுஞ்சாசுரக் சழக்கன்
அடலொழியந் தனி சுடாயிலைத் தொடு
மய்யனே—அகல்
கடலுலகிற்பல இடர்களொழித் தருள் செய்யனே

பண்ணார் மொழிக் குறத்தி கண்ணாசை மெத்த வைத்துப்
பரவு புனத்திடை விரவு தனிற்றிரி பாதனே—குளிர்
சரவணநற்பெயர் விரவு தடத்தெழு நீதனே
எண்ணாதிழித் துரைக்கும் நண்ணார் குலத்தை முற்ற
இகழ்வித் தெம நகரி புகுத்திய ஈசனே—என்றும்
புகழ்புரி பத்தர்தம் அகமருவித் திகழ் நேசனே!

வண்டார் செழுங்கடம்பின் தண்டார் புனைந் திலங்கும்
மருவு தடங்கிரி யொருபனி சண்டெனும் வாகனே
—உயர்
சுரபதி தந்திடு தெர்வை மகிழ்ந்தனை யோகனே.
மண்டாசை யாலுடலம் கொண்டாழி சூழுலகில்
மதியழி வாருயர் கதிபெற மேவுரு மாரனே—செந்திற்
பதியிடை வானர் துதிசெய வாழ்வுறு தீரனே.

பாலாழியிற் றுயிலும் மாலானவர்க் கினிய
பரிவு மிகுத்திடு மருகனெனந் தகு பண்பனே— அயன்
தெரிய மறைப்பொருள் விரிய வுரைத்தருள் நண்பனே
வேலா மலைக்குமரி பாலா தமிழ்க் கருள்செய்
மீனுவுலவுங் குளிர் வானதி தந்திடு மெய்யனே—புகழ்
வானளவுஞ் சிவஞான புரந்திகழ் துய்யனே!

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 52
பகுதி : 12
அக் 2009

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2040

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் **நா.குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

பொருளடக்கம்

இதழ்மணம் 3

நல்லறங்கள் 4
திரு. அ. பாண்டி

அன்பின் ஐந்திணை : முல்லை 11
(தொடர்ச்சி)
திரு. வி. நாகசுந்தரம்

இரட்டைக் குழந்தைகள் 26
புலவர்.க. தண்டபாணி

தமிழ் வளர்ச்சியில் சமயமும் சமுதாயமும் 28
முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

இதழ் மணம்

அல்லவை அழிந்து, நல்லவை வாழ, நம் நாடு முழுவதும் கொண்டாடும் திருவிழா நம் அனைவருக்கும் இனிமை நல்கட்டும்.

காலங்காலமாகப் போற்றிப் பாதுகாக்கப்படும் அறங்கள், தற்காலத்தில் தளர்ந்துள்ள நிலையைச் சமூக அக்கறையுடன் *திரு அ. பாண்டி* தன்னுடைய **"நல்லறங்கள்"** என்னும் கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

"அன்பின் ஐந்திணை" களுள் ஒன்றான முல்லைத் திணைப் பாடல்களை உலகின் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு தமிழ் முல்லையின் சிறப்பைத் திரு. வி. நாகசுந்தரம் வெளிக்காட்டியுள்ள பாங்கு தமிழ்ச்சுவை மிக்கது.

"கல்வியும் ஒழுக்கமும்" மக்களுக்கு இரு கண்களாகத் திகழ்வதைக் குறள் வழி விளக்கியுள்ளார், *புலவர் க. தண்டபாணி.*

தமிழ் வளர்ச்சியுற்று, நிலைத்து நீடித்து வாழ **"சமயமும் சமுதாயமும்"** எங்ஙனம் உறுதுணையாக விளங்கியது என்பதை முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம் சீரிய முறையில் ஆய்வு செய்து புலப்படுத்தியுள்ளார்.

தமிழ்மொழியின் செழிப்பையும் தமிழ் இலக்கியங்களின் செறிவையும் நுட்பமாக ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ள இதழாக, இம்மாத இதழ் வாசக அன்பர்களின் கையில் தவழ்கிறது.

–முனைவர் க. சின்னப்பா

நல்லறங்கள்

திரு.அ. பாண்டி., எம்.ஃபில்,

முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை நீதிகளைக் கூறுவனாக உள்ளன. இவற்றில் கூறப்பட்டுள்ள நல்லனவும், தீயனவும் சமுதாயம் தழைக்க வேண்டும் எனக் கூறப்பட்டனவாகும். இவை பின்னாளில் வளர்ந்தனவா? தளர்ந்தனவா? என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறன்வலியுறுத்தல்

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (குறள். 34)

ஒருவன் மனத்தில் குற்றம் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும். அவ்வாறின்றிக் குற்றம் நிறைந்த மனத்துடன் அவன் சொல்வதும் செய்வதும் அறமாகாது. இன்றைய மானுட சமுதாயத்தில் எத்தனைப்பேர் குற்றமற்ற உள்ளத்தினர்? அழுக்காறு, அவா, வெகுளி போன்றன இல்லாத, எண்ணாத உள்ளத்தவராக உள்ளனர்?

பொறையுடைமை

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (குறள் 151)

தன்னைத் தோண்டுபவரையும் தாங்கும் நிலம் போல இகழ்வாரையும் தாங்க வேண்டுமானால், அவரைப் பிறர் எல்லோரும் இகழ்ந்துகொண்டேதான் இருப்பார்கள். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்ட நாமொன்றும் பொறுமையின் சிகரமல்லவே. இன்றைய சமுதாயத்தில் ஒன்றுக்கு இரண்டாகத் திருப்பிக் கொடுக்காவிட்டால் நம்மைப் பிறர் மதிக்கமாட்டார்கள். ஆகவே பொறுமையென்பது மக்களிடம் இன்று அரிய பண்பாகப் போய்விட்டது என்பதே உண்மை.

மக்கட்பேறு

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" (குறள். 65)

என்பது உண்மைதான்.

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்". (குறள். 66)

இப்படிப் பிள்ளைகளைப் போற்றி வளர்த்த பெற்றோர்களை அவர்தம் பிள்ளைகள் இன்று எப்படி போற்றிப் பாதுக்காக்கின்றனர்? ஈன்ற பொழுதில் பெரிதும் உவந்த தாயும், அவையத்து முந்தியிருக்கச் செய்த தந்தையும் இன்று முதியோர்க் காப்பகங்களில் வாழ்க்கை நடத்தப் பார்க்கிறோம். பெற்றோரைப் போற்றும் நன்மக்களைக் காண்பது இன்று அரிது.

விருந்தோம்பல்

செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் காலம் அரிது. இன்று மோப்பக் குழையும் அனிச்சமும் அரிது. நோக்கக் குழையும் விருந்தினரும் அரிது. விருந்தோம்பல் என்பது இக்காலத்தில் "நாங்க நல்லா இருக்கோம், நீங்க நல்லா இருக்கீங்களா?" என்று வார்த்தைகளால் கேட்பதோடு முடிந்துபோகிறது.

"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடை பழவாள் வைத்தனன் இன்று"
(புறம். 316: 5-6)

விருந்தினருக்காகத் தன் உடைவாளை வைத்துப் பொருள் பெற்றுப் பிறர் பசி தீர்ப்பது இன்று அருகிக் கொண்டே வருகிறது என்பதை நேரிற் காண்கின்றோம்!

கொல்லாமை

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்கத் தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை" (குறள். 327)

"கொல்லவினையர் ஆகிய மாக்கள்புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து" (குறள். 329)

தன்னுயிர் நீங்கிவிடும் என்ற நிலை வந்த போதும், வேறோர் உயிரை நீக்கிவிடலாகாது என்பதும், கொலைத் தொழிலைச் செய்யும் மாக்கள் அத்தொழிலின் இழிந்த தன்மையை அறிந்த உயர்ந்தவர்கள் அதனைக் கீழாக மதிப்பர் என்பது அறியப்படாலும் அந்தத் தொழிலைக் கைவிட்டார் யார்? ஆடு மாடுகளைக் கொல்வதற்கென்றே தனியிடம் ஒதுக்கி அங்கே அவற்றை உணவுக்காகக் கொலை செய்யலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. அதை மீறி அவரவர் விருப்பம் போலத் தனியிடங்களிலும் அவை கொல்லப்படுவதை இன்று பார்க்கிறோமே? கொல்லும் தொழிலை நடத்துவது இப்போது ஒரு வருவாய் மிக்க தொழிலாக மாறியிருக்கிறது. இதனை யார் மறுக்க முடியும். ஆகவே கொல்லாமையும் அரிதாகிவிட்டது இன்று.

புலால்மறுத்தல்

"தன்னூன் பெருக்கத்திற்குப் பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆறும் அருள்" (குறள். 25)

"தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்"
(குறள். 256)

அருள்தரும் கோவில்களிலே ஆடு, மாடுகளைக் கொல்லக் கூடாது என அரசு ஆணையிட்டது. மக்களிடம் அதற்கு எவ்வளவு எதிர்ப்பும் போராட்டங்களும் நடந்தன? அதனால் அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டது என்பது ஊரறிந்த உண்மை. தெருத்தோறும் இறைச்சிக்கடை உள்ளதே அந்த இறைச்சியை மக்கள் உண்ணாமல் வேறுயார் உண்கின்றனர். ஆகவே புலால்மறுத்தல் என்னும் அறம் இப்போது அரிதாகிப் போனது.

கள்ளுண்ணாமை

"கைஅறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய் அறியாமை கொளல்" (குறள். 925)

ஒருவன் விலை கொடுத்துக் கள் உண்டு அதனால் தன் உடம்பை மறந்திருத்தலை, கொள்ளுதல் செய்வதறியா அறியாமையைக் கைக்கொள்வதாகும் என அறிந்த சான்றோர்களே,

"மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டுஅன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்"
(புறம். 113.1-2)

"நறவம்தொடுமின் விடையும் வீழ்மின்"
(புறம் 262.1)

"சிறியகட் பெறினே யெமிக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே"
(புறம். 235.1-3)

இவையெல்லாம் சான்றோர்கள் பாடிய புறப்பாடல்கள். அக்காலத்தில் மக்கள் கள் உண்டு நன்கு மகிழ்ந்திருந்தமையை இவற்றால் அறியலாகும்.

"உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப்பட்ட வேண்டா தார்" (குறள் 922)

என்கிறார் வள்ளுவர்.

ஆனால்,

"பச்சை முந்திரித் தேம்பழம்கொன்று
பாட்டுப்பாடி நற்சாறு பிழிந்தே
இச்சைதீர மதுவடித் துண்போம்
இஃது தீதென்று மடையர்கள் சொல்லும்
கொச்சைப் பேச்சிற் கை கொட்டிச் சிரிப்போம்."
(பாரதியார் கவிதை, ப. 241)

"கொஞ்சும் மாதரும் சுட்டுண் கள்ளும்
இச்சகத்தில் இன்பங்களன்றோ
இவற்றின் நல்லின்பம் வேறொன்றுமுண்டோ
வண்டாகி வானிலே வலம்வரும்படி என்னை

வைக்கின்ற மதுக்கிண்ணமே
வாராய் நின் ஊற்றிலே ஆடாதவர்க் கெல்லாம்
வாழ்க்கையே மரண பயமே"

(கண்ணதாசன் கவிதைகள், ப.20)

அன்றிலிருந்து இன்றுவரையுள்ள பெரும்பாலான புலவர்களும், கவிஞர்களும் மதுவைப் போற்றிப் பாடிய கவிதைகள் மிகுதி. அரசே இன்று வருவாயைப் பெருக்க மதுக்கடைகளைத் திறந்துவைத்துக் குடியுங்கள் குடிமக்களே என்கிறது. இதில் உண்ணற்க கள்ளை என்னும் அறம் தளர்ந்துபோனது என்பதே உண்மை.

வரைவின் மகளிர்

தமிழ் இலக்கியங்களில் மருதத்திணையில் பரத்தமை குறித்துப் பாடாத பாடல்கள் குறைவு எனலாம்.

கிரேக்கப் பண்பாடு பற்றிய ஒரு தகவல், கிரேக்கத்தில் எடைரை என்னும் விலைமாதுடன், அரிஸ்டிபஸ் என்னும் தத்துவஞானி உறவு கொண்டதைப் பிறர் எள்ளி நகையாடியபோது. எடைரை என்பவள் எனக்கே. ஆனால் தான் அவளுக்கல்ல என்றாராம். முன்பு பலர் குடியிருந்தார்கள் என்பதற்காக அழகான வீட்டில் குடியேறாமல் இருக்கிறோமா? மரக்கலத்தில் பலர் ஏறிப்பயணம் செய்தார்கள் என்பதற்காக அதில் பயணம் செய்யாமலா இருக்கிறோம் என்றாராம். ஒரு பெண்ணிடம் பலர் உறவு கொண்டார்கள் என்பதற்காக உறவு கொள்வதில் என்ன தவறு என்றாராம் (கதிர்மகாதேவன், தமிழ்ப் பண்பாடு பக். 17-18). இக்கேடு இன்று தமிழகத்திலும் நாகரிகம் என்ற பெயரில் வளர்ந்து வருகிறது கண்கூடு.

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில்பிணம் தழீஇ யற்று" (குறள். 913)

கம்பராமாயணத்தில் வரும் அகலிகையின் கதை அகலிகை வேறொருவருடையவள் எனத் தெரிந்தும் அவள்மேல்

ஆசைகொண்டு உறவாடிய இந்திரன் பிறன்மனை நயந்தவன் அல்லவா?

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி" (குறள். 25)

ஐம்புலன்களையும் அடக்கிய இந்திரனின் அடங்காமை இதனால் உணரப்படுகிறது. அகலிகை என்றுமில்லாப் பேராசை என்கணவர் கொண்டாரே, இன்றுகண்டேன் பேரின்பம் என்றிணங்கி விட்டாளாம். தன் கணவன் தரும் சுகத்தைவிட மற்றொருவன் மேலான சுகம் தந்தால் பொறுத்துக் கொண்டிருப்பாள் என்பதற்கு இதுவும் ஒரு சான்று. சங்க இலக்கியங்களில் பரத்தமையைப் பாடிய புலவர்கள் பிறனில்விழையாமை பற்றிப் பாடாதுவிட்டது ஏனோ என்பது எண்ணி ஆராயத்தக்கது.

"பிறருக்கு உரியவளைத் தான்விரும்புவது கொடுமை, தன்னை விரும்பாத ஒருத்தியைத் தான் விரும்புவது கயமை, தன்னைப் பற்றி அறியாத ஒருத்தியைத் தான் அறிந்து நாடுவது குற்றம். தன்னை விரும்பாத ஒருத்தியைத் தான்நாடி நிற்பது பேதமை, தன்னை வெறுத்து ஒதுக்கும் ஒருத்தியை நினைத்து வருந்தி உடைவது கோழைத்தனம்" (மு.வ. வாழ்க்கை விளக்கம், ப.57) இன்றைய வன்மையாளர்கள் ஒருத்தியின் விருப்போ, மறுப்போ வாய்ச் சொற்களோ என்ன பயனும் இல என எண்ணுகின்றனர் போலும்

ஆண்களும், பெண்களும் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கீழ்வரும் பாடல்களால் நாம் நன்கு அறியலாம்.

"தன் மனையாளைத் தனிமனையிருத்திப்
பிறன்மனைக் கேகும் பேதையும் பதரே"
(நறுந்தொகை, 70)

"பிறன் மனையாள் பின்னோர்க்கும் பேதமையின்னா"
(இன்னாநாற்பது. 38)

"இல்லிருந் தெல்லை கடப்பாளும்" (திரிகடுகம். 500)

"அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் - கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுவாள்"(நான்மணிக்கடிகை, 85)

"இல்லிற்கிசைந் தொழுகாப்பெண்" (மூதுரை. 23)

"கொண்டான் கொழுநன் உடன்பிறந்தான் தன்மாமன்
வண்டார் பூந்தொங்கல் மகன் தந்தை-வண்தாராய்
யாப்பார் பூங்கோதையணியிழையை நன்கியையக்
காப்பார் கருதுமிடத்து" (சிறுபஞ்சமூலம். 54)

இப்பாடலில் கூறப்பட்டவர்கள் கற்பைக் காப்பாற்றுவார்களாம். ஐயோ பாவம். இவர்களால் தானே கற்புப் பறிபோகிறது. உடன்பிறந்தாருள் பாலியல் கொடுமை, கணவனே விபச்சாரத்திற்கு உடந்தை, குழந்தைகளை விட்டுவிட்டு கள்ளக்காதலனுடன் போதல், மனைவியை விட்டுக் கள்ளக்காதலியுடன் போதல், கள்ளக் காதலுக்காக மனைவியைக் கொல்வது, அல்லது கணவனைக் கொல்வது இவையெல்லாம் இன்றையச் செய்தித்தாள்களில் வரும் அன்றாட நிகழ்வுகள், பிறினில்விழையாமை என்னும் அறம் தேய்ந்து போய்ப் பிறனில்விழைதல் இன்று நடைமுறையாகிவிட்டது.

முடிவுரை

திருக்குறளில் கூறியுள்ள அதிகாரங்களில் திருவள்ளுவர் எவற்றையெல்லாம் சமுதாயத் தீங்கு எனக் கடிந்து ஒதுக்கினாரோ அவையெல்லாம் இன்று மக்களால் ஒதுக்கப்படாமல் பின்பற்றப்படுகின்றன. கள்ளுண்ணாமை, பிறனில்விழையாமை, கல்லாமை, கொல்லாமை, இன்னாசெய்யாமை போன்ற 18 ஆமைகளைக் கூறி அவற்றைத் திருவள்ளுவர் களையச் சொன்னார். ஆனால் இன்று அவற்றை ஆமைகளாக எண்ணாமல் மக்கள் ஆணைகளாக ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பது வெளிப்படை. ஆகவே பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கூறப்பட்ட அறங்கள் தளர்ந்து மறத்தன்மைகள் வளர்ந்தன என்பதை மேற்கண்ட சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

* * * * * * *

அன்பின் ஐந்திணை : முல்லை

(தொடர்ச்சி)

திரு. வி. நாகசுந்தரம்

வரலாற்று நோக்கில் முல்லை

முல்லை நிலம்

இந்தியாவிற்கு வெளியே முல்லை நிலப்பகுதிகள் என்று பார்த்தோமானால், 'கார்பேதியன்' மலைத் தொடரிலிருந்து 'அல்தாய்' மலை அடிவாரம் வரை உள்ள பரந்த 'ஸ்டெப்பி' புல்வெளிகளைக் குறிப்பிடலாம். ஆனால், இந்தியாவின் தமிழ் நாட்டு இடையர், ஆயர் முல்லை நில வாழ்க்கையிலிருந்து மய்ய ஆசிய ஸ்டெப்பி புல்வெளிகள் வாழ்நர் வாழ்க்கை இருவகையில் வேறுபட்டது.

மய்ய ஆசியப் புல்வெளிகள் மக்கள் வாழ்க்கை முறை

ஒன்று கூடார வாழ்க்கை, இன்னொன்று மேய்ச்சல் நிலம் தேடி அடிக்கடி இடம் பெயரும் நாடோடி வாழ்க்கை. ஆனால் பண்டைத் தமிழகத்தின் தட்ப வெட்ப நிலை காரணமாக (ஏன்... இன்று வரையிலும் அப்படியே தான் உள்ளது!) கூடாரம் தேவைப்படவில்லை. மூங்கில் தூண் நட்டு, சில கொம்புகளைச் சட்டமாய்க் கட்டிப் பனை ஓலை வேயப்படும். அவ்வளவுதான் இருப்பிடம். இருப்பிடம் வட்டமாக இருந்தால் உச்சியில் பானையைக் கவிழ்த்து வைப்பர். இப்பழக்கம் இன்று வரை தொடர்கின்றது. செழிப்பான மண், தவறாத பருவமழை காரணமாக ஒரே பகுதியில் ஆண்டாண்டு காலமாக மேய்ச்சலுக்குப் புல் இங்கு தாராளமாகக் கிடைத்தது. அதனால் 'ஸ்டெப்பி' நிலத்தைப்போல் இங்கு கூடாரம், நாடோடி வாழ்க்கை இல்லை. பண்டைத் தமிழகத்தின் ஆயரின் வாழ்வு நாகரீகம் உருவாக்கத்தக்க நிலையான வாழ்க்கை முறையாக இருந்தது.

முல்லை நிலமக்களின் வாழ்க்கைமுறை

மனித குலவரலாற்றின் ஆரம்ப கட்டங்களில் மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்த மனிதர்கள் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக அடுத்துள்ள கானகப்பகுதியான முல்லை நிலத்திற்குச் சென்றனர். மனிதன் இதற்குள் நாய், எருமை, பசு, ஆடுகள் போன்ற விலங்குகளைப் பழக்கி வளர்க்கக் கற்றுக் கொண்டான். ஆரம்ப காலக்கட்டங்களில் குறவர் நிலையிலேயே நாயைப் பழக்கப்படுத்தி இருப்பான் வேட்டைக்குச் செல்வதற்காக! ஏனைய விலங்குகள் பின்னர் பழக்கப்பட்டிருக்கும். மனித இனத்தின் நாகரீக வளர்ச்சியின் இரண்டாவது நிலையான ஆயர் நிலை இவ்வாறு எய்தப்பட்டது. முல்லை நிலத்தின் ஆடு, மாடுகள் விரைந்து பெருகும். அதனால் முதன் முதலாகத் தனி நபர் சொத்துரிமை ஏற்பட்டது. இனக்குழுக்கள் தனித்தனிக் குடும்பமுறை ஆகியவை உருவாயின. சமுதாயத்தின் இரண்டாவது வளர்ச்சி நிலை இது!

ஆரம்பகால முல்லை நிலத் திருமண முறை

காதல் மணம், மணச்சடங்குகள் இன்மை (புலிப்பல் தாலி, தழையுடை தவிர) ஆகிய தன்மைகளைக் கொண்டதும், "களவு" என்று பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பதுமான இயற்கைமணமுறை முல்லை நிலத்தில் மெதுமெதுவாக மாறிக் கற்பு மணம் ஏற்பட்டது. முல்லை நிலக் குடியிருப்பில் பந்தல் போடப்படும். அப்பந்தலைப் பூ, இலைகளால் அலங்கரித்து உற்றார், உறவினர்கட்கு விருந்து அளிப்பதே கற்பு மணச்சடங்காக இருந்தது. சடங்கு முடிந்ததும் உடன் கூட்டம் நிகழ்ந்தது. இவ்வாறு முல்லை நிலத்திருமணமுறை பற்றித் தனது தமிழர் வரலாறு என்ற நூலில் குறிப்பிடும் வரலாற்றுப் பேரறிஞர் திரு.பி.டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், இத்திருமணமுறைக்கு ஆதாரமாக எந்த இலக்கியத்தையும் சுட்டவில்லை!

தனிநபர் சொத்துரிமை, கற்புமணம் ஆகியவை தந்தைவழிச் சமுதாயம் உருவாக வழிவகுத்தது. காரணம் ஏராளமான ஆடு, மாடுகளைத் தன் சொத்தாக உடைய தலைவன் தன் செல்வம்

காரணமாக அதிகாரமும், ஆதிக்கமும் பெற்றான். கூட்டுக் குடும்பமுறை உருவானது. பெரிய குடும்பத்தின் தலைவன் நாளடைவில் சிற்றரசன் ஆனான். தமிழகத்தில் இவ்வாறு அரசன் உருவானான் என்பதைக் காட்டும் சொல் "கோன்" ஆகும்! (கோன்– இடையன்) கோல் கோன். கோன் = இடையன்/அரசன் இடைச்சி – ஆய்ச்சி/அரசி. ஆடு, மாடு மேய்க்க உதவும் "கோலே" பின்னாளில் அரசனின் "செங்கோல்" ஆயிற்று. ஆயின் முல்லை நிலத்தில் குறு நில அரசுகளே உருவாயின என்றும், மருத நிலத்தில் தான் பேரரசு உருவாகியதென்றும் கருதலாம். ஆநிரையைச் செல்வமெனப் போற்றும் முல்லை நிலச் சிற்றரசுகளிடையே ஏற்பட்ட சிறுசிறு போர்கள் (ஆநிரைகவர்தலால்) தொடக்க காலப் போர்களாக இருந்தன. எனவே பண்டைத் தமிழகத்தின் முதற்போர் முறையாக ஆநிரைகவர்தல் அமைந்தது.

உலகச் செவ்வியல் மொழிகளில் முல்லைப் பாடல்கள்

இலக்கிய வகைகளில் ஒன்றாகக் கூறப்படும் பாடல்களில் இடையர், இடைச்சியரின் காதல் உணர்வுகள் சிறப்பிடம் பெறும். கிராமிய வாழ்வை – கற்பனையான பொற்கால வாழ்வைச் சித்தரிக்கும் பாடல்களே முல்லைப் பாடல்கள் என்பர் மேலை நாட்டு மொழியியல் வல்லுநர்கள். உலகப்புகழ்பெற்ற முல்லை நிலப் பாடல்களைப் பாடியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் தியாக்ரிடஸ், வொர்ஜில், ஸ்பென்சர் மற்றும் போப் ஆகியோராவர். 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாட்டாரிடம் வடமொழி பரவிய அளவிற்குத் தமிழ் பரவவில்லை. மேலும் "சங்க இலக்கியங்கள்" என்று இப்பொழுது நாம் கூறும் இலக்கியங்களும் அக்கால கட்டத்தில் வெளிப்படவில்லை. எனவே தமிழில் உள்ள 234 முல்லைப் பாடல்களையும் அறியாத மேல்நாட்டு மொழி இயல் அறிஞர்கள், கிரேக்க நாட்டில் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் தியாக்ரிட்சு அவர்களையே "முல்லைப் பாடல்களின் தந்தை" என்பர். அக்காலகட்டத்தில், மூன்றே அடிகள் கொண்ட ஐங்குறு நூற்று முல்லைப் பாடல்களையும், 188 அடிகள் கொண்ட நெடுநல் வாடையையும் அவர்கள் அறியார்! எனவே உலக முல்லைப்

பாடல்களின் பிறப்பிடம் தமிழகம், மொழி தமிழ் என்று நாம் அறுதியிட்டுக் கூறலாம். உலக மொழிகளில் உள்ள முல்லைப் பாடல்களின் கார்காலப் பின்னணியும் மாலைநேர வருணனைகளையும் தமிழ்ப் பாடல்களைப் போன்றே குழலிசையும், குரலிசையும் நிரம்பி வழிவதைத் தமிழ்ப் பாடல்களிலும் காண்கின்றோம். தமிழில் உள்ள முல்லைத் திணைப் பாடல்களைக் காண்பதற்கு முன்பு கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், வடமொழி மற்றும் இந்திய மொழிகளில் உள்ள முல்லைப் பாடல்களைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

கிரேக்கம்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவரான தியாக்ரிட்சு அலேக் சாண்டிரியாவின் அரசவைக்கு வந்த பின்னர் அவர் பாடிய பாடல்கள் இடியல்ஸ் (Idylls) உலகப்புகழ் பெற்றவை. இவரை “உலக முல்லைப் பாடல்களின் தந்தை” என்று அழைப்பர். இவரது முல்லைப் பாடல்களில் இசைப்போட்டி, கைக்கிளைக்காதல், நண்பனின் இறப்பு, மேயும் ஆடுகள், புல்வெளிகள் ஆகியவை இவரது பாடல்களுக்குப் பின்னணியாக இருந்தன. ஸ்டெசிகோரசு, மோஸ்சசு, பையன் ஆகியோர் முல்லைப் பாடல்கள் பாடியுள்ளவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ‘பேரிஸ்’ என்னும் இடையன் தவறான ஒரு பெண்ணை அழகி என்று தேர்ந்தெடுத்ததால் ‘டிராய்’ நகரமே அழிவதை ‘இலியது’ விளக்குகின்றது. இவ்வாறு கிரேக்க இலக்கியத்தில் முல்லை நிலப்பின்னணி இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

இலத்தீன்

கி.மு. முதல் நூற்றாண்டில் வர்ஜில் தியாக்ரிட்சின் மரபைப் பின்பற்றி முல்லைப் பாடல்கள் பாடியுள்ளார். இவர் பாடிய மொத்தப் பாடல்கள் 10. முதல் பாடலில் ஓர் இடையன் புகழிடம் தேடி அலைதல், மற்றோர் இடையன் அவனைத் தங்கிச்செல்ல வேண்டுவதும் காணப்படுகின்றது. இதை வர்ஜிலின் வரலாறே என்று கூறுவர். மற்றும் கைக்கிளைக் காதல் பாடல் ஒன்றும்

பாடியுள்ளார். அவரது நான்காவது பாடல் Messiah (மெஸெய்யா) உலகப் புகழ் பெற்றது. இயேசுவிற்கு முன்னர் தோன்றிய வர்ஜில் சிறப்புமிக்க குழந்தை ஒன்று பிறந்து உலகை அமைதிப்படுத்தும், பொற்காலத்தை ஏற்படுத்தும் என்று பாடியுள்ளார். ஏசுநாதரை இப்பாடல் குறிக்கிறது என்றும் கூறுவார்கள். இக்கருத்தை மறுப்பவர்களும் உண்டு. வர்ஜிலிக்குப் பின்னர் கல்புர்னியகசி குலுசு, எமின் செடலு, நெமசியனுசு ஆகியோர் முல்லைப்பாடல்கள் பாடியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

எபிரேயம்

எபிரேயத்தின் செவ்வியல் மொழிக்காலம் என்று கி.மு.12 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டுவரைக் கூறுவர். இக்காலகட்டத்தில்தான் பழைய ஏற்பாடு எழுதப்பட்டது. பழைய ஏற்பாடு முல்லை நிலப்பகுதியையே பின்னணியாகக் கொண்டது. ஏசுநாதர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்ததும் முல்லை நிலப்பகுதியில்தான். மேலைநாட்டுச் செவ்வியல் மரபைப் பின்பற்றி பின்வந்த ஐரோப்பிய மொழிகளின் பாடல்கள் முல்லை நில மரபைக் கொண்டுள்ளன. சன்ன சரோ என்பவர் வர்ஜிலின் இயற்கைப் பின்னணியைப் பின்பற்றி ஆர்கேடியா எனும் காதல் பாடலைப் பாடியுள்ளார். ஸ்பென்சர் ஆர்கேடிய மரபைப் பின்பற்றிய முதல் ஆங்கிலப் புலவர். அவர் பாடிய "The Shepherds Calendar" குறிப்பிடத்தக்கது. மார்வெல் போப் ஆகியோரும் இதே மரபைப் பின்பற்றி முல்லைப் பாடல்கள் பாடியுள்ளனர்.

இந்தியமொழிகளில் முல்லைப்பாடல்கள்

இந்திய நாகரீகத்தின் இரண்டாம் நிலை முல்லை நில வாழ்க்கை என்பதைக் கண்டோம். தமிழகத்தில் சிற்றரசர்களும், வேளிர்களும் உருவானது முல்லை நிலத்தில் தான். சேர, சோழ, பாண்டியப் பேரரசுகள் உருவானது மருத நிலம் எனலாம். ஆனால் பண்டைத்தமிழகம் தவிர்த்து இந்தியாவின் ஏனைய பகுதிகளில் முல்லை நிலத்தின் அருகே மருத நில வாழ்க்கை இருந்தது. சான்று பலராமன் வரலாறு. இருப்பினும் கிரேக்கம், இலத்தின், தமிழ் ஆகிய செவ்வியல் மொழிகளில் இருப்பதுபோல் வடநாட்டில் ஏனோ, எந்த

மொழியிலும் முல்லைப்பாடல்கள் தோன்றவில்லை. ஆயின், காளிதாசனின் மேகதூதம், ருதுசம்ஹாரம் ஆகியவையும், கதாசப்தசதி (70 கதைகள்) என்னும் காதல் கவிதைகளும் கார்கால வர்ணனை, காத்திருக்கும் காதலி நிலை ஆகியவற்றைக் கொண்டுள்ளன. ஆந்திர மன்னன் ஹாலன் இந்த கதாசப்தசதி என்னும் பிராகிருதக் கவிதைகளைத் தொகுத்தான் என்பர். சங்கஇலக்கிய முல்லைப் பாடல்களின் தலைவியர்களின் கூற்றுக்களைப் போல் உள்ளன. எனவே கதாசப்தசதியின் காதல் கவிதைகள் சங்க இலக்கியங்களிலிருந்து தோன்றியிருக்கலாம்.

சங்கத்தமிழில் முல்லைப் பாடல்கள்

கடைச்சங்க இலக்கியங்களாக எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமே கருதப்படும். எட்டுத்தொகை நூல்களில் அக இலக்கியங்களான நற்றிணையில் 30 பாடல்கள், குறுந்தொகையில் 45, ஐங்குறு நூற்றில் 100, கலித்தொகையில் 40, அகநானூற்றில் 40 பாடல்களும், பத்துப்பாட்டில் நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு ஆகிய இரண்டு பாடல்களும் முல்லைத் திணைப்பாடல்கள். மொத்த முல்லை நிலப்பாடல்கள் 234, மிகக்குறுகிய 3 அடிச்சிற்றெல்லையில் ஐங்குறு நூற்றுப் பாடலையும், மிக அதிகமாக 188 அடிகளைக் கொண்ட நெடுநல்வாடைப்பாடலையும் காண்கின்றோம். எட்டுத்தொகை நூல்களில் இடைக்காட்டரும் மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனாரும் மிக அதிகமாக முல்லைப் பாடல்கள் (ஏழு) பாடியுள்ளார்கள் முல்லைப் பாடல்களைப் பாடிய புலவர்கள் எண்ணிக்கை 73. பாடிய புலவர்கள் பெயர்கள் தெரியாத பாடல்கள்6, அகம் பாடல் எண். 114- குறுந்தொகை 191, நற்றிணை 115,161,169,181. முல்லைப் பாடல்கள் பாடியுள்ள புலவர்களுள் இளங்கண்ணனார், கதக்கண்ணனார், கோவர்த்தனார், தாயங்கண்ணனார், பெருங்கண்ணனார் ஆகியோர் முல்லை நிலக்கடவுள் மற்றும் இடையார் பெயர்களைத் தாங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகச் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் ஆகிய மொழிகளிலுள்ள முல்லைப் பாடல்களின் எண்ணிக்கையை விட தமிழ் மொழியில் உள்ள முல்லைப் பாடல்களின் எண்ணிக்கை அதிகம், இனி எட்டுத் தொகை நூல்களிலிருந்து இரண்டு முல்லை நிலப்பாடல்களையும் பத்துப்பாட்டில் நெடுநல்வாடை முல்லைப் பாட்டு ஆகியவற்றையும் மிகச் சுருக்கமாகக் காண்போம்!

குறுந்தொகை பாடல் எண் 167, செவிலித்தாய் கூற்றாகக் கூடலூர்க் கிழார் பாடியது.

"முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல்முகனே"

தன்மகள் தன் காதற்கணவன் வீட்டில் எப்படி இருக்கின்றாள் என்பதைக் கண்டறியும் பொருட்டுச் சென்ற செவிலித்தாய் அவ்விருவரும் மிக்க நேயமுடையவராய் வாழ்வது கண்டு, தன்னுள்ளே மிக்க மகிழ்வுற்று நற்றாயிடம் கூறியதாக இப்பாடல் பாடப்பட்டிருக்கிறது. உள்ளமுவக்கும் முல்லை நிலத்தில் கணவனும், மனைவியும், நேயமாய் மருவிவாழும் இயற்கை இப்பாட்டின் கண் ஓவியம் எழுதிக் காட்டினாற்போல் எவ்வளவு உண்மையாகவும், இயற்கையாகவும், இனிதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்!

"என் மகள் வற்றக்காய்ச்சின கட்டித் தயிரைப் பிசைந்த காந்தள் மலர் முகிழ் போற் சிவந்த மெல்லிய விரல்களால் நன்கு கழுவி வெண்மையான உயர்ந்த ஆடை சமையல் செய்யும் விரைவினால் இடுப்பினின்றும் அவிழ்ந்து கழல அதனைக் கை கழுவாமலே உடுத்திக் கொண்டு, குவளை மலர் போன்ற மை தீட்டிய தன் கண்களிலே தாளிப்புச் செய்யும் புகைப்பட்டு மணக்கவும், அதனையும் பாராது, தான் துடுப்பினால் துழாவி மிக்க அன்போடு சமைத்த சுவைமிகுந்த புளிப்பாகினைத் தன் கணவன் மிகவும் இனிதாயிருக்கிறதென்று சொல்லிக் கொண்டே உண்ணுதலைப் பார்த்து ஒளி மிகுந்த நெற்றியினையுடைய என் மகளின்முகம் உள்ளுக்குள்ளே நுட்பமாய் மகிழ்ச்சி அடைந்தது" என்பதுதான் இப்பாட்டின் பொருள். இச்செய்யுளின் இயற்கையழகும் இதன் கண்காட்டப்பட்டிருக்கும் மன உணர்வின் இயல்பும் எவ்வளவு அருமையாக இருக்கின்றன.

இதோ! இன்னொரு பாடல். (பாடல் எண் 411) பாடியவர் பேயனார். தலைவன் தலைவிக்குக் தான் குறித்துச் சென்ற கார்கால வருகையைக் காட்டி அப்பருவம் வருவதற்கு முன்பே வந்தமை தோன்ற அவளைப் பாராட்டிக் கூறும் "தொகுதி கிழவன் பருவம் பாராட்டுப்பத்து"

புதுப்புனல் ஆடுவோம்

"ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கார் தொடங்கின்றால் காமர்புறவே;
வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்
தாழிருங் கூந்தல் வம்மதி விரைந்தே!"

வினை முடித்துவந்த தலைவன் தலைவியை நோக்கி, "தாழ்ந்த கரிய கூந்தலை உடையவளே! நிறைந்த இடி ஒலியையுடைய மேகம் மிகுந்த மழை பெய்தலால் அழகிய முல்லைக் காட்டில் கார்காலம் தொடங்குகின்றது. நாம் விருப்பம் அளிக்கும் புதிய நீரில் விளையாடலாம். ஆதலால் விரைந்து வருக" என்றான்! இதோ! தலைவனும் தலைவியும் புதுப்புனல் வரும் கான்யாற்றில் மகிழ்ச்சி ததும்ப விளையாடி மகிழ்கிறார்கள்! இதற்கு மேலும் நாம் அங்கிருப்பது முறையன்று! எனவே அந்தச் சங்ககால கணவன் மனைவியை வாழ்த்தி விடை பெறுகின்றோம்!

கார்காலம்

தலைவன் பொருள்தேட/போருக்குச் செல்லும் வழியினைக் கார்காலப் பின்னணியில் வருணிப்பது மரபன்று. ஒரு சில ஐங்குறு நூற்றுப் பாடல்களில் கார்காலப் பின்னணி வருவதுண்டு. பொதுவாக முல்லைப் பாடல்களில் தலைவன் சென்ற வழியைக் கூறும் பொழுது 'பாலை' வருணணையே அமைந்துள்ளது. ஆனால் தலைவன் வினைமுடித்துத் திரும்பும்பொழுது இதே நிலம் முல்லை நிலமாகக் கூறப்படுகின்றது! எவ்வாறு எனின், தலைவன் செல்லும் பொழுது வேனில் கொடுமையால் முல்லை நிலமே 'பாலை' போல் மாறியுள்ளது. பின்னர் கார் காலத்தில் தலைவன் மீண்டு வரும் பொழுது பெய்த பெருமழையால் பாலை போல் தோன்றிய நிலம்

முல்லை நிலமாக மாறி விடுகின்றது. எனவே இங்கு பாலை என்பது நிலப்பிரிவன்று. தற்காலிகமாகப் கோடையில் ஏற்பட்ட மாற்றமே என்க, எனவே தலைவன் செல்லும் பொழுது பாலை போல் தோன்றிய நிலம் மீண்டும் வரும் பொழுது கார்காலப் பின்னணியுடைய பசுமையான முல்லை நிலமாக இருக்குமெனலாம்.

(Prof Dr. N. Jayaraman in his "A study of Kapilars Poetry", P. Xi says, "This avid tract becomes fertile and pleasant because of the heavy dounpour during the rainy season. The Land thar was avid during summer when the hero left the heroine becomes a fertile forest region in the rainy season when the hero returning home this because of the reasonal variations Palai changes into mullai and viceversa".)

கற்பியல் முல்லை

'கற்பு' என்பது கல்போன்ற திண்மை என்றும். இல்வாழ்க்கைக்கு உரியன கற்று, கற்ற நெறியில் நிற்றல் என்றும் பலவாறு பொருள் கூறப்படும். ஆயினும் 'கற்பெனப்படுவது சொல் திறம்பாமை' என்ற அவ்வையின் விளக்கமே உண்மையைத் தெளிவுப்படுத்துகின்றது. 'கடமையை முடித்துக் கார்காலத்திற்குள் திரும்பி வருவேன்', என்று தலைவன் கூறிப்பிரிகிறான். "கார்காலம் வரை நீ பிரிவை நினைத்துப் புலம்பாமல் பொறுத்திரு", என்று விடை பெறுகிறான். அவ்வாறே கலங்காது பொறுத்திருப்பதாக ஆற்றியிருப்பதாகக்கூறித் தலைவியும் விடை தருகிறாள். இருவரும் இருவகைச் சொற்களால் கட்டுப்படுத்தப்படுகின்றனர். குறித்த காலத்திற்குள் வருவதாகக்கூறித் தலைவன் கட்டுபடுகிறான். இருவரும் சொன்ன சொல் தவறாமல் தத்தம் கட்டுப்பாட்டிற்கு இயைந்து நடக்கின்றனர். இவ்வாறு 'சொல்' திறம்பாமல் நடத்தலே 'கற்பு' என்னும் ஒழுக்கமாகும். இக்காரணத்தாலேயே 'முல்லை' என்பது 'கற்பு' என்னும் பொருள் உடைத்தாயிற்று என்பார் டாக்டர் மு.வ. அவர்கள்!

இனி பத்துப்பாட்டில் உள்ள முல்லை நிலப்பாடல்களான நெடுநல்வாடை, முல்லைப்பாட்டு ஆகிய இரண்டையும் காண்போம். நெடுநல்வாடையைச் சற்று சுருக்கமாகவும், இக்கட்டுரையின் கருப்பொருளான 'முல்லை' என்பதையே தலைப்பாகக் கொண்டுள்ள 'முல்லைப்பாட்டை' சிறிது விரிவாகக் காண்போம்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் பாண்டிமாதேவியின் துயரம் நீங்குமாறு பகைவரை வென்று, வேந்தன் விரைவில் வருவானாக எனக் கொற்றவையை ஒரு பெண் பரவிப்பாடுவதாக, நக்கீரர் இப்பாடலை 188 அடிகளில் பாடியுள்ளார். நூலறி புலவர் நுட்பமாகக் கட்டிய அரண்மனையில் வாழும்அரசிக்குப் பிரிவுத் துயரால் வாடைக்காற்று நெடியதாகவும், பாசறையில் போர் மேற்கொண்ட வேந்தனுக்கு வெற்றிபெற வாடைக்காற்று நல்லதாகவும் அமைந்ததால், இந்நூலுக்கு "நெடுநல்வாடை" என்று அழகாகப் பெயரிட்டுள்ளார். இத்தலைப்பே கலையழகு மிக்கதாகும். நெடுநல்வாடையின் சிறப்பு கருதி திரு.வி.க. அவர்கள், "ஒரு சிறுபுல் நுனியில் மருவும் ஒரு பனித்துளியினிடை ஒரு பெரிய ஆலமரம் காட்சி தருகிறது. அதைப்போல் சிறிய நெடுநல்வாடையில் பெரிய உலகம், உயிர், அன்பு, தெய்வம், இவற்றின் திறங்கள் முதலியன காட்சி தருகின்றன", என்றும் நெடுநல்வாடை ஒரு பெருஞ்சுரங்கம்; நக்கீரர் கண்ட சுரங்கம், தமிழ்ச் சுரங்கம் என்பார்.

(According to Prof. P. Sundaram Pillai,

"Such is the outline of Nakkirar's "Nedunalvadai"; and i would request the reader to study in the original and then to say whether the author does not deserve to be placed among the very best of the poets of any country. The extreme simplicity of the central conception, the natural ease with which it is developed, the pleasing but in every way true and accurate portraits of nature amid which it is set and the taste and tact with which every line is made to subserve the one single artistic effect that the whole piece is intended to produce, are simply admirable").

நச்சினார்க்கினியர் நெடுநல்வாடைக்கு எழுதிய உரையின் இறுதியில் 'பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனார் மகனார் பாடிய நெடுநல்வாடைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த உரை முற்றிற்று' எனும் குறிப்பு உள்ளது. ஆயினும் நெடுஞ்செழியனை நக்கீரர் இப்பாட்டில் வெளிப்படையாக எங்கும் குறிப்பிடவில்லை "வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்" என நெடுநல்வாடைப் பாடலடியில் பாண்டியருடைய அடையாள மாலையாகிய வேப்பம்பூ மாலையைச்

சொல்லி இருப்பதால் இது நெடுஞ்செழியனைப் பற்றிய பாட்டு என்கின்றனர். பாண்டிய மன்னனைப் பற்றிய குறிப்பு இப்பாட்டில் வருவதால் இது புறத்திணைப்பாட்டு என்பர். "இப்பாட்டு சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாமையின் அகப் பொருளாமேனும், வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்" என அடையாளப்பூ கூறினமையின் அகம் ஆகாதாயிற்று என்கிறார் நச்சினார்க்கினியர் "வேம்பு" என்ற ஒற்றைச் சொல்லை நீக்கி விட்டால் நெடுநல்வாடை "முழுக்க முழுக்க" அகம் "தழுவிய இலக்கியம்" என்பதில் யாருக்கும் 'ஐயம்' இருக்காது!

நூலின் சிறப்புக்கள்

கூதிர்காலத்தில் மக்களும், மாக்களும் குளிரால் வருந்துவது, அரசி இருக்கும் அரண்மனை அமைப்பு அரண்மனை வாயில் முற்றம், அந்தப்புரம், அரசி துயிலும் கட்டிலின் சிறப்பு, புனையா ஓவியம் போல் அரசி இருத்தல், பாசறையில் அரசன், புண்பட்ட வீரர்களையும், விலங்குகளையும் பார்த்தல், வீரர்களுக்கு ஆறுதல் கூறுதல், யவனர் இயற்றிய பாவை விளக்கு, மிலேச்சர்கள் நகரினைக் காவல் காப்பது, கொற்றவை வழிபாடு, பூ மலர்ந்து பொழுதறியும் வழக்கம், மாலைக் காலத்தை மகளிர் கொண்டாடும் முறை, வீட்டில் கிடக்கும் சந்தனக்கல்லும் வாடைக் காற்றை நமக்கு நினைவூட்டுதல் போன்ற பல்வேறு செய்திகளை நாம் நெடுநல்வாடையில் காண்கிறோம். நெடுநல்வாடை என்ற பெயருக்கு ஏற்ப பாட்டு முழுவதும் வாடைக்காற்றின் ஆட்சியைக் காண்கிறோம். இறுதியில் மன்னனின் பாசறைத் தொழிலும் அவனது கடமை உணர்வும் வீரர்களுக்கு ஆறுதல் கூறும் நிலையும் நக்கீரரால் சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது.

"நன்னென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"

இரவில் சிலரோடு பாசறையில் திரிகின்ற மன்னன், பின்னாளில் பலரோடு போரிட்டு வெற்றிகண்டு திரும்பப் போகிறான். மன்னனின் தேரை இழுத்துவரும் குதிரைகளின் குளம்பொலி, மன்னன் பிரிவினால் வருந்தியிருக்கும் அரசியின் காதில் விழப்போகிறது. இனி அரசிக்கு எந்நாளும் இன்பமே 'பிரிவு' என்ற துன்பமில்லை என அரசியை நாமும் வாழ்த்துகின்றோம்.

நெடுநல்வாடையின் சிறப்பு நோக்கி க. கோதண்டபாணி பிள்ளை அவர்கள் நெடுநல்வாடை பாநலன் என்ற ஆய்வு நூலையும் செ. வெங்கடராமச்செட்டியார் அவர்கள் புனையா ஓவியம் என்னும் அரிய நூலையும் இயற்றியுள்ளனர்.

இனி முல்லைப் பாட்டைக் காண்போம்.

முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டிலேயே மிகவும் சிறியது முல்லைப்பாட்டு. 103 அடிகளைக் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவால் ஆகியது. தலைவியைப் பிரிந்த தலைவன் மீண்டு வரும் வரையில் தலைவி ஆற்றியிருக்கும் முல்லை சார்ந்த கற்பினைக் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைவன் வரும் வரை ஆற்றியிருந்தமை கண்டு இந்நூலை நெஞ்சாற்றுப்படை எனக்கூறுதலும் உண்டு. மேலும் முல்லை எனவும் இந்நூல் வழங்கப்படும். நற்றிணையில் 29–ஆம் பாடலையும் இவர் பாடியுள்ளதாகக் கூறுவர்.

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறா அர்"

எனும் தொல்காப்பிய விதிக்கு ஏற்ப இப்பாட்டுடைத் தலைவன், தலைவி பெயர்கள் இது அகப்பாடலாததால் குறிக்கப் பெறவில்லை.

பாட்டுடைத் தலைவன்

முல்லைப்பாட்டை அடுத்திருக்கின்ற மதுரைக் காஞ்சியும், நெடுநல்வாடையும் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு விளங்கலால், அவற்றை அடுத்து இருக்கின்ற முல்லைப்பாட்டும் அவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கலாம் என்கிறார் மறைமலை அடிகள். தனது முல்லைப்பாட்டும் அவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு செய்யப்பட்டிருக்கலாம் என்கிறார் மறைமலை அடிகள் தனது முல்லைப் பாட்டு ஆராய்ச்சி நூலில். ஆனால் அவ்வாறு கொள்வதற்கு முல்லைப் பாட்டில் சான்றுகள் காணப்படவில்லையாதலால் முல்லைப் பாட்டின் தலைவனாகப்

பாண்டியன் நெடுஞ்செழியனைக் கொள்வதற்கு இடமில்லை.

"நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல நிமிர்ந்த மா அல் போல,
பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

கார்காலம், மாலைப் பொழுது கடல் நீரை உண்ட மேகம் கறுத்து உலகம் முழுவதையும் வளைக்கிறது; மின்னுகிறது, இடி இடிக்கிறது., மழைபொழிகிறது, உலகத்தை ஓர் அடியால் வளைத்த திருமாலைப் போல மேகமும் ஒரே வேளையில் நிலம் முழுவதையும் சூழ்கிறது. முல்லை நிலக்கடவுள் திருமால் முல்லைத் திணைக்குரிய பெரும் பொழுது கார்காலம், சிறு பொழுது மாலை, இம்மூன்றையும் ஒன்றாக இணைத்து நப்பூதனார் வெகுசிறப்பாகப் பாடலை – முல்லைப்பாடலை தொடங்குகிறார். எழில்மிகு முல்லை நிலப் பின்னணிக்கு ஏற்ற பொருளாக அகப்பொருள் பிணைக்கப்பட்டு பின்னர் அதுவே மரபாக மாறியது என்பர். மேலும் இயற்கை புத்துயிர் பெருகின்ற வசந்த காலமாகிய கார்காலம் காதலுக்கும், இசைக்கும் ஏற்ற காலமாகக் கருதப்பட்டது.

("Spring the fairest season of the year, when nature comes to life again and men have a glimpse of the golden age once more is the time for love and song.

"Music making with voice and pipe is the central activity of the whole pastoral way of life" - Greak and latin life nature Robert Coleman).

குழலிசையும், குரலிசையும் முல்லை வாழ்வின் மையமாக இருந்தது தமிழகத்தில் முல்லை வாழ்வு ஒய்வுடையதாகவும், இசை நிரம்பியதாகவும் உள்ளமை குறிக்கத்தக்கது. கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை இந்நிலையே தொடர்ந்து இருந்திருக்கிற தென்பதை (ஆனாய நாயனார் புராணம்) பெரிய புராணம் வாயிலாக அறிகிறோம். கார்காலப் பின்னணியில் முல்லைப் பாட்டைப் பாட ஆரம்பித்து அதே கார்காலமும், தலைவனின் தேர்வரும் காலமும்

ஒரே ஒலியாய் இணைய, இரு இருதயங்களும் ஒன்றாக இணைகின்றன என்பதைச் சொல்லாமல் சொல்லி முடிக்கிறார் ஆசிரியர். கார்க்காலப் பாடல்களில் தலை சிறந்த பாட்டு முல்லைப் பாட்டு எனலாம்.

முல்லைப் பாடல்கள் வழி நாம் அறியும் சில சங்ககாலச் செய்திகளையும் முத்தாய்ப்பாக முல்லைப்பாட்டு பற்றிய ஒரு சிறிய குறிப்புரையுடன் நமது முல்லை பற்றிய ஆய்வுக் கட்டுரையை முடிப்போம்.

முல்லைப்பாடல்கள் வழி நாம் அறியும் சில சங்ககாலச் செய்திகள்

1. விரிச்சி கேட்டு நிற்கும் பொழுது நற்சொல் கேட்பின் நன்மை நடக்குமென்றும் நல்லது அல்லாத சொல்கேட்பின், நன்மை நடவாது என்றும் நம்பினர் அக்கால மக்கள். இன்றும் கிராம மக்களிடையே இதே பழக்கம் தொடர்கின்றது.
2. பகை நாட்டின் மீது படை எடுத்துச் செல்லும்பொழுது மன்னர்கள் காட்டில் "பாடிவீடு" அமைப்பது வழக்கம்.
3. யானைகளோடுப் பேச பாகர்கள் வடமொழியைப் பயன்படுத்தினர்.
4. போர்க்களங்களில் மங்கையர் பணி புரிந்தனர்.
5. ஏழடுக்கு மாளிகையில் மக்கள் வசித்தனர்.
6. நாழிகைக் கணக்கர் 'நாழிகை வட்டில்' கொண்டு காலத்தைக் கணித்தனர்.
7. கிரேக்கம், ரோம் ஆகிய மேலை நாடுகளிலிருந்து கம்மர்களை வரவழைத்து அருமை மிக்க கம்ம வேலைகள் செய்து வந்தனர்.
8. யவனர்கள், மிலேச்சர்கள் முதலிய பிற நாட்டினரை வேந்தர்கள் ஏவல் கொண்டனர்.
9. அரசுச் செய்திகளைப் பிறர் அறியாதிருக்க ஊமையர்களை (மிலேச்சர்) அரசர்கள் தங்களுக்குக் காவலாக வைத்திருந்தனர்.
10. நால்வகைப் படைகளையும் பண்டைய மன்னர்கள் பயன்படுத்தினர்.

11. முல்லைப் பாட்டின் தொடக்கத்தில் மேகத்திற்குத் திருமாலை உவமை சொல்வது குறிக்கத்தக்கது. ஏனைய முல்லைப் பாடல்களில் (கலித்தொகை தவிர) திருமாலைப்பற்றிய குறிப்பு ஒன்றையும் காணமுடியவில்லை.

12. மற்ற சங்க இலக்கியங்களில் உள்ள முல்லைப் பாடல்கள் போன்று இல்லாது, கலித்தொகை முல்லைப் பாடல்கள், யாப்பால், துறைபால், பாடுபொருளால், கூற்றால், கதைமாந்தர், பண்பால், பழக்கத்தால் தனியான ஒரு சமுதாய வாழ்வுக்கு உரியதாகக் கருதும்படி அமைந்துள்ளது.

முடிவுரை

முல்லைப் பாட்டில் திருமால் பற்றிய உவமையோடு கார்கால மழை மற்றும் மாலை நேர வருணனைகள் சிறப்பாக இடம் பெறுகின்றன. ஆநிரை காக்கும் கோவலர் வாழ்க்கை பற்றி பேசப்படுகின்றது. பின்னர் தலைவியின் தனிமை மற்றும் அவளது பிரிவாற்றாமை தலைவனது பாசறை இருப்பு மிக விளக்கமாகவும், விரிவாகவும் பேசப்படுகின்றது. கார்காலம் வந்தும் தலைவன் வராமையால் ஆற்றியிருக்கும் தலைவியின் நிலையைக் கைகள் மெலிய வளைகழல, கண்கள் நீர் சொரிய, தலைவியைத் தேற்றும் தோழிகள் எனத் தலைவனின் வரவை நோக்கி வழிமேல் இயற்கையாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர். இதே தலைவன் மீண்டு வரும் காலமும் கார் காலமும் ஒன்றாக இணைந்து தலைவனின் தேரில் பூட்டப் பெற்ற குதிரைகளின் ஒலி, தலைவியின் காதில் அமுதாக ஒலித்தது. இனி இன்பமே எந்நாளும் என்றுமிக நுட்பமாகக் கூறி முடிக்கின்றார் காவரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார்.

ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்

1. தமிழர் வரலாறு — திரு பிடி. சீனிவாச ஐயங்கார்
2. முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை — மறைமலை அடிகள்
3. சங்க இலக்கியத்தேன் — சிலம்பொலி செல்லப்பனார்
4. முல்லைப் பாடல்கள் — முனைவர். என். ஜெயராமன்
5. நெடுநல்வாடை — புலவர் மாணிக்கனார்
6. முல்லைப்பாட்டு — (வர்த்தமானன் பதிப்பகம்)
7. தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள்

இரட்டைக் குழந்தைகள்

புலவர் க. தண்டபாணி

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" - 392

கல்வியும் ஒழுக்கமும் இரட்டைக் குழந்தைகள். இக்குறளில் வள்ளுவர் கல்வி, ஒழுக்கம் என இரண்டையும் மொழிந்துள்ளார். இக்குறளில் கல்வி உள்ளது. ஒழுக்கம் எங்கே உள்ளது. ஏழு சீர்களிலும் ஒழுக்கத்தைக் காணவில்லையே. ஆராய்ந்து பார்த்தால் அவ்வொழுக்கம் புலப்படும்.

இக்குறளில் இரண்டு கண்ணே உவமை. காண்பதற்குக் கண் மட்டும் போதுமா? இரண்டு கண் – பழுதற்ற கண் – குறையற்ற கண் – பார்க்கும் திறன் படைத்த கண். பார்க்க முடியுமா? ஒளியின் உதவியின்றி பார்க்க முடியுமா? காண்பதற்குக் கண்ணுடன் ஒளியும் தேவை. எனவே இவண் ஒரு கண் பார்வை, மறுகண் ஒளி என உவமை மூன்றாகிறது.

உவமை மூன்றானால் பொருளும் மூன்றாக வேண்டுமல்லவா? பொருளிலும் மூன்றைத்தான் வள்ளுவர் புகன்றுள்ளார். ஆய்ந்து பார்த்தால் அம்மூன்றும் புலப்படும். இக்குறளில் எண் என்பது ஒரு பொருள். சிறந்த வாழ்வுக்கு எண் (கணக்கு) மட்டுமே போதுமா? கணக்கில் உலகப்புகழ் பெற்றுள்ளான் ஒருவன். அவன் மிகச் சிக்கலான கணக்கையும் ஒரு நொடியில் தீர்க்கும் வல்லமை பெற்றவன். அவனால் நல்வாழ்வைப் பெற முடியுமா? ஒழுக்கத்தின் உதவியின்றி நலமாக வாழமுடியுமா? ஒழுக்கத்தைக் கைவிட்டு பொய்க் கணக்கு எழுதினால் அவன் சிறையில் அல்லவா வாழ்வான். எனவே நல்வாழ்வுக்குக் கணக்குடன் (எண்ணுடன்) ஒழுக்கமும் தேவை.

இக்குறளில் எழுத்து என்பது மற்றொரு பொருள். நல்வாழ்வுக்கு எழுத்து மட்டும் போதுமா? எழுத்தாளனாக உலகப் புகழ் பெற்றுள்ளான் ஒருவன். அவன் இலக்கண இலக்கியங்களை ஆய்ந்து நூல்கள் பல எழுதியவன். அவனால் நல்வாழ்வைப் பெறமுடியுமா? ஒழுக்கத்தின் உதவியின்றி நலமாக வாழ முடியுமா? ஒழுக்கத்தை கைவிட்டு பொய்க் கையெழுத்து இடுவானே ஆனால் அவன் சிறையில் அல்லவா வாழ்வான். எனவே நல்வாழ்வுக்கு எழுத்துடன் ஒழுக்கமும் தேவை. இவண் எண், எழுத்து, ஒழுக்கம் எனப் பொருளும் மூன்றாகிறது.

உவமையில் ஒளியையும் பொருளில் ஒழுக்கத்தையும் வள்ளுவர் மறைமுகமாகப் பாங்குடன் பகர்ந்துள்ளார். கண்ணுக்கு ஒளி தேவைப்படுகிறது போல எழுத்துக்கும் எண்ணுக்கும் (கல்விக்கு) ஒழுக்கம் தேவை என்பதை வள்ளுவர் ஆய்ந்து, தேர்ந்து, தெளிந்து நவின்றுள்ளார். கல்வியும் ஒழுக்கமும் இரட்டைக் குழந்தைகள். கல்வி அமைந்த இடத்தில் ஒழுக்கமும் அமையும்.

"அணுவைத் துளைத்தெழு கடலைப் புகுத்தி
குறுகத் தரித்த குறள்"

என்ற ஔவையாரின் கருத்து மிகையல்ல உண்மையே.

****
****

தமிழ் வளர்ச்சியில் சமயமும் சமுதாயமும்

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

மொழி என்னும் சாதனம், உலகின் மற்ற உயிர்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுகிறது. உலக மொழிகள் மக்களின் அல்லது நாட்டின் பெயரால் அமைத்திருக்கின்றன. தமிழைப் பொறுத்தவரையில் மக்களுக்கு மொழியின் பெயரால் தமிழர் எனப் பெயர் அமைந்ததோடு, நாட்டுக்கும் தமிழ்நாடு எனவும் அமைந்திருக்கிறது. மனிதன் படைத்த கருவிகள் பலவற்றுள் மொழி எனப்படும் கருவி ஏனைய அனைத்துக் கருவிகளிலும் வேறுபட்டது; உயர்ந்தது; அளவிடற்கரிய ஆற்றல் வாய்ந்தது. சமுதாயம் என்ற அமைப்பின் அடிப்படை, சமுதாயச் சக்கரத்தின் அச்சு–மொழியாகும். ஓர் இனத்தை அடையாளம் காட்டுவது மொழிதான். அவ்வினம் தனது மொழியை இழந்தால் தன்னுடைய அடையாளத்தை இழந்துவிடும்.

மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்

மொழியைப் பற்றி மொழிநூலார் "மொழி என்பது மக்கள் படைத்துக்காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது" என்கிறார் டாக்டர் மு.வ. எனவே மொழி என்பது கலையாக மட்டுமில்லாமல் மக்களின் அறிவை வளர்த்து அறியாமையைப் போக்கும் கருவியாகவும் விளங்குகிறது. சமுதாய வாழ்வுக்கு அறிவை வளர்த்து அறியாமையைப் போக்கும் கருவியாகவும் விளங்குகிறது. சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழியே, அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. சமுதாயத்தால் வளர்ந்து, சமுதாயத்தை வளர்த்து வருகிறது. மொழியாவது மக்கள் தம் கருத்தை ஒருவருக்கொருவர் வெளியிடுவதற்குரிய கருவியாம் ஒலித்தொகுதி.

அதேபோல், பல்வேறு குறிப்புகளைப் பகிர்ந்தளிக்கும் ஒலியின் கூட்டமாகவும் உள்ளதாக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணார் கூறுகிறார். மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்திற்குரிய ஒரு கருவி. எழுத்து வடிவமும் பேச்சு வடிவமும் கருத்துப் பரிமாற்றத்திற்கான இருவகை ஊடகங்களாகும். மொழியானது கருத்தைப் பரிமாறிக்கொள்ள எழுத்து, பேச்சு ஆகிய இருவகைப் பணிகளுக்கும் முக்கியமானது என்கிறார் ஆரோக்கியநாதன். "மொழி பொதுவாகக் கருத்து வெளிப்பாட்டிற்குரிய ஒரு கருவி என்று கூறுவார்கள். மொழி கருத்து வெளிப்பாட்டிற்கு மட்டும் உரிய கருவியல்ல. உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும் உரிய கருவியாகும்" என்கிறார் பொற்கோ. இவ்வாறு மொழிநூலாரின் பார்வையில் மொழியானது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்த மக்களிடையே ஒரு சாதனமாகப் பயன்படுகிறது.

மொழி என்றால் மொழிதல் என்று பொருள்படும். மொழியைத் திருந்திய மொழி, திருந்தா மொழி என்ற இரண்டு வகைக்குள் அடக்குவர். திராவிட மொழிக் குடும்பங்களுள் தமிழானது திருந்திய மொழியாகவும், மூல மொழியாகவும் உள்ளது. தமிழ்மொழியின் திருந்திய தன்மையையும் மென்மையையும் *"It is one of the most copious refined and polished language spoken by men"* என்று டெய்லர் கூறியுள்ளது வலிமை சேர்ப்பதாக உள்ளது.

"தமிழ் மொழியானது நமது மேன்மைக்கு நமது தகுதிக்கு முற்போக்குக்கு ஏற்ற மொழியாகும். மேலும், இந்திய நாட்டுப் பிறமொழிகளைவிட நாகரிகம் பெற்று விளங்குகிறது" எனத் தமிழைத் தகுதி வாய்ந்த மொழியாகப் பெரியார் காட்டுகிறார். சாதி, மதம், சமயம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் மொழி தன்னிச்சையாக இயங்க வேண்டுமென்பது பெரியாரின் விருப்பம். அதனால், "தமிழ் என்றைக்குச் சமயத்தில் போய்புகுந்ததோ, சமயத்துக்காரன் எப்போது தமிழ் கதவைத்திறந்தது; இறந்தவனை எழுப்பியது என்ற சமயத்திலே கொண்டுபோய் புகுத்தினானோ அன்றே தமிழும் முன்னேற முடியாமல் கெட்டுப்போய் விட்டது மதம் தமிழைக் கெடுத்தது" என்று சாடுகிறார்.

தமிழில் ஆக்க இலக்கியங்கள் தோன்றவில்லை என்பது மட்டுமல்ல ஆக்க இலக்கியங்களே அநேகமாக இல்லை. பழங்காலந்தொட்டு கூறிவந்த புராணங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் என்று பழமை பற்றியே படித்தும் பேசியும் வருகிற நமது தமிழுக்கென்று புதிய வரவுகள் எதுவுமில்லை என்பது பெரியாரின் கருத்து. விஞ்ஞானம், பகுத்தறிவு, சுயமரியாதையறிவு போன்றவற்றை உள்ளடக்கிய இலக்கியங்களை ஆக்க இலக்கியங்கள் என்றும், தமிழில் அத்தகைய இலக்கியங்களே இல்லையென்றும் உரைக்கிறார். "ஒரு மொழியானது காலத்துக்கு ஏற்றாற்போல் புதிய படைப்புகளைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்றும், அப்போதுதான் அம்மொழியின் சிறப்பை முழுமையாக நம்மால் சுவைக்கமுடியும் என்றும் அறிஞர்கள் கருதுவார்கள். அத்தகைய கருத்தை வலியுறுத்தும் வகையில் பெரியாரின் கருத்துக்கள் அமைந்துள்ளன" என்று தமிழ் பற்றி கமலக்கண்ணன் கூறுவது சிந்தனைக்குரியது.

சிந்தனையை வளப்படுத்தி, அறிவின் தரத்தை உயர்த்தி வாழ்க்கையை உயர்த்துவதே கவிதையின் நோக்கமாக இருக்க வேண்டும். அறியாமையை நீக்குவதும் அறிவை வளர்ப்பதும் ஒரே செயல்தான். ஒரு பாடலின் ஆற்றல் ஆயிரம் செங்கோல்களைவிட உயர்ந்தது. குப்பைத்தொட்டியில் குப்பை என்ற பெயரில் எதை வேண்டுமானாலும் போடலாம். தங்கப்பேழையில் அவ்வாறு செய்தல் கூடாது. தங்கப்பேழையில் வைக்கும் பொருள் அப்பேழையின் மதிப்பை விட உயர்ந்ததாக இருக்க வேண்டும். கவிதையில் பொதிந்துள்ள பொருளும் அப்படித்தான் இருக்க வேண்டும்.

சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் மக்களுடைய சிந்தனை ஓட்டத்திற்கும் ஏற்றவாறுதான் கவிதைகள் அமையமுடியும். கவிதையின் பாடுபொருளையும், வடிவத்தையும் கூட இவையே நிர்ணயிக்கின்றன. எனவே, சமுதாய சட்டத்திற்கு ஏற்றவாறு கவிதை இருக்கவேண்டியுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் தேசிய எழுச்சி ஏற்பட்டதால் கவிதைகளில் எழுச்சியும், உணர்ச்சியும் பாடுபொருளாக மிளிர்ந்தன. பகுத்தறிவு

உணர்ச்சி, பகுத்தறிவு இயக்கம் ஆகியவற்றின் செல்வாக்கினால் கவிதைகளில் சீர்திருத்தம், அறிவியல்நோக்கு ஆகியவற்றைப் பார்க்கமுடிகிறது. சமுதாய நீரோட்டத்தின் சிந்தனைப் போக்குகளின் உணர்ச்சி பிரதிபலிப்புகளைக் கவிதைகளில் நாம் பார்க்கிறோம். இதைக் காத்து வளர்க்க வேண்டும்.

சங்ககாலத்தில் முதன்முதலாக, தமிழ்மக்களின் ஆற்றல்களையும் தமிழரசர்களின் ஆற்றல்களையும் தமிழின்மேல் ஏற்றுவதாக வரும் ஒரு தொடர் சிலப்பதிகாரத்தில் 'அருந்தமிழ் ஆற்றல்' என்று வருகின்றது. சேரன் செங்குட்டுவன் வடநாடு நோக்கிப் படையுடன் புறப்படும் பொழுது அருந்தமிழாற்றல் அறிந்தவர் ஆங்கென எனக்கூறிப் புறப்படுகிறான். இங்கு அருந்தமிழாற்றல் என்பது அருந்தமிழர் ஆற்றல் அல்லது அரசர்களுடைய ஆற்றல் என்பதாகும். அதனைத் தமிழின் மேல் ஏற்றி "தமிழ் ஆற்றல்" என்று கூறுகிறான். இங்கு தமிழ் என்பதற்கு 'வீரம்' என்பது பொருளாகிறது. திருமந்திரத்திற்குத் தமிழ் மூவாயிரம் என்று பெயர். திருமூலர்,

"என்னை நன்றாக இறைவன் படைத்தான்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்று பாடுகிறார். இங்கு தமிழ் என்பதற்கு 'இறைமை' என்று பொருள்படுகிறது. சம்பந்தரைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று குறிப்பிடுகிறோம். இங்கு தமிழ் என்பதற்கு 'சைவ சமயம்' என்றாகிறது.

தமிழ் இலக்கியங்கள் பாடுபொருள் என்ற அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. எந்த ஒரு பொருள் குறித்தும் பாடப்பெறுவது – அது இயற்கைப் பொருளாயினும் செயற்கைப் பொருளாயினும் அல்லது கற்பனைப் பொருளாயினும் – பாடுபொருள்களாக அமைவது உலகப்பொதுக்கோட்பாடாகும். தமிழ் இலக்கியங்களில் பாடுபொருள்களாக இருந்தவை மொழியுணர்ச்சிக்கும் ஏதோ ஒரு வகையில் உதவியிருக்கின்றன. "கால்டுவெல் காலத்துக்குப் பின்பு மொழி என்பது ஒன்று உண்டு; பாடுபொருளெல்லாம் மொழியாகிவிட்டது என்ற தெளிவான

உணர்வு தோன்றுகிறது. இந்த அடித்தளத்தைக் கொண்டுதான் பின்னர் தனித்தமிழ் இயக்கம் தோற்றமெடுத்தது. தனித்தமிழ் இயக்கம் தோன்றியபோதுதான் பாடுபொருளும் மொழியும் வேறு என்பதை மக்கள் மனம் சரியாகவும் தெளிவாகவும் உணர்ந்து கொள்கிறது" என்று தெளிவுபடுத்துகிறார் பொற்கோ.

சமயமும் சமுதாயமும்

தமிழகத்தில் கி.பி. 13ம் நூற்றாண்டில் முகமதியர்களின் படையெடுப்பால் பலகோயில்கள் கொள்ளையடிக்கப்பட்டன. சைவர்கள், தங்களுடைய கோயில்களைப் பாதுகாத்துக்கொள்ள பல மடங்களைத் தோற்றுவித்து வலுப்பெற செய்ததால் சைவசித்தாந்த சாத்திரங்கள் உருப்பெற்றன. இச்சூழலால் தமிழைக் காப்பாற்றுகின்ற ஒரு பெரிய பொறுப்பு சைவர்களுக்கு ஏற்பட்டது. சைவத்தைச் சார்ந்தவர்கள் சமணத்தின் மேலாதிக்கத்தைத் தாங்க முடியாமல் அதனை எதிர்த்துப் போராடினார். முகம்மதியர்களின் படையெடுப்பும் நடைபெற்றது. சைவர்கள் நேரடியாக அரசர்களோடு மோத முடியாமலும் புதியதாக வந்த படையெடுப்புகளோடு மோத முடியாமலும் ஆகிவிட்ட சூழ்நிலைகளில்தான் மடங்களைத் தனியாக நடத்தினர். மக்களுடைய ஆதரவு பெருகியது.

ஒரு காலகட்டத்தில் சைவர்கள் சமணத்தை எதிர்த்த வேகத்தில் சைவ இலக்கியங்களைத் தவிர வேறெந்த இலக்கியங்களும் தமிழில் இருக்கக் கூடாதென்று மற்ற இலக்கியங்களை எதிர்த்ததால், சங்க இலக்கியங்களும் புறக்கணிக்கப்பட்டன. இச்சூழலில் சைவசமயத்தைக் காப்பவர்கள் வடமொழியையும் தமிழையும் சமமாகவாவது நடத்த வேண்டும் என்று விரும்பினர். ஆனால், வடமொழியாளர் ஏற்காததோடு, குடமுனியின் குதத்திலிருந்து தமிழ் பிறந்ததாகக் கேலி செய்து எழுதியதால் தமிழுணர்ச்சியானது சுயமரியாதைப் பிரச்சனையாகவும் தன்மானப் பிரச்சனையாகவும் உருவெடுத்தது.

கோயில்களில் இறைவனைப் பாடும்பொழுது வடமொழியும் தமிழும் சமம் என்ற நிலையைச் சைவர்களால் நிலைநாட்டிக் கொள்ள இயலவில்லை. அத்தருணத்தில் தமிழை உயர்த்திப் பேச ஓர் அணி சைவர்களிடம் திரண்டது. சைவசமயத்திலிருந்து

அவர்கள் வடமொழி மேலாதிக்கத்தை எதிர்த்தவர்கள். இந்த எதிர்ப்பின் சிறந்த அறிகுறியாகப் படிப்படியாக வளர்ந்து குறிப்பிட்ட காலத்தில் சிகரம் வைத்தாற்போல மறைமலையடிகள் உருவில் வெளிப்பட்டது. சமயம் வளர்த்த தமிழ் உணர்ச்சியின் காலத்தில் சமுதாய அடிப்படையிலும், அரசியல் அடிப்படையிலும் ஒரு மொழியுணர்வு தேவைப்பட்டது. மறைமலையடிகள், பெரியார் ஆகியோரின் தொடர்பு இதற்கு வழிவகுத்தது. "பெரும்பாலான மக்களுக்குத் தமிழ் எந்தளவிற்குப் பயன்பட வேண்டும். தமிழ் உணர்ச்சி எந்த அளவிற்கு வளர வேண்டும் என்பதில் அக்கறைக் காட்டியவர்கள் சுயமரியாதை இயக்கத்தவர்களும் திராவிட இயக்கத்தவருமாவர். வகுப்புவாரி உரிமைச் சிந்தனைகள் படிப்படியாக வளர்ந்து, திராவிடர்களுக்கு 50 விழுக்காடு உரிமை வேண்டும் என்று கேட்குமளவிற்கு உயர்ந்தது. இராஜாஜி பெரியாரைக் காங்கிரசில் சேருமாறு அழைத்தபோது இந்த 50 விழுக்காடு உரிமைக்கு இராஜாஜி இணக்கம் தெரிவித்தார். ஆனால் செயல்படுத்தாததால் பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்".

1938–இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பெரியார் நடத்திய போது மறைமலையடிகள் தலைமையில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. இவர்கள் இருவரும் தமிழன்மேல் நிகழும் ஆதிக்கத்தைத் தமிழ்நாட்டில் எதிர்ப்பது என்ற கருத்தொற்றுமையுடன் செயல்பட்டனர். தமிழ் இணைந்தபோது தமிழறிந்தவர்களும், புலவர்களும் சுயமரியாதை இயக்கத்தோடு தங்களைத் தொடர்புபடுத்திக் கொண்டனர். சுதந்திரப் போராட்டத்தின் வழி ஏற்பட்ட தேசிய எழுச்சி, மொழி உணர்ச்சியையும் எழுப்பிற்று. தேசிய எழுச்சி ஏற்பட்ட போது ஒவ்வொரு மாநில மொழியாரும் தங்களுடைய மொழியைச் சிந்தித்ததுபோல தமிழகத்தில் தமிழ்மொழி பற்றி சிந்திக்கத் தொடங்கியதால் தேசிய எழுச்சியை அடிப்படையாகக் கொண்டு தமிழ் உணர்ச்சி தோன்றியது. அதற்கு வ.உ.சி, திரு.வி.க., பாரதியார் போன்றோர் உறுதுணையாய் விளங்கினார்கள்.

சமய உலகிலிருந்தாலும் தமிழ் உணர்வு தலைதூக்கிட உதவிய யோகி சுத்தானந்த பாரதி, "தமிழ் மறுபிறப்பு எடுத்துள்ளது.

இனி பழைய நிலைக்குத் திரும்பாது. சில பழம் பாடல்களை வைத்துக்கொண்டு எமது தமிழே பெரிது என்றால் உலகம் ஒப்பாது. சிவனைத் தூதனுப்பியதும், முதலை விழுங்கிய பாலகனை அழைத்ததும், எலும்பைப் பூங்கோதையாக்கியதும், கல்லைத் தெப்பமாக்கியதும் எமது தமிழ்தானே என்று புராணம் பேசிய காலம் போய்விட்டது" என்றார். மேலும் தனித்தமிழ் முயற்சி மட்டும் போதாது என்பதையும், சமுதாய உயர்வுக்கு வேண்டிய அறிவுச் செல்வத்துடன் திகழ வேண்டுமென்பதையும், "உலகம் ஒரு பாஷையை மதிக்க வேண்டுமானால் அது உலகைப் புறக்கணித்துத் தனிச் செருக்குடன் வாழக்கூடாது அதில் உலகம் மதிக்கும்படியான அறிவுச் செல்வம் நிரம்பி இருக்க வேண்டும். இலக்கிய உலகில் இன்று ஒரு ஜனநாயகம் நடக்கிறது. பழம் பண்டிதர்கள் கையிலிருந்து இலக்கியம் பொது ஜனங்கள் கைக்கு வந்துவிட்டது. ஆசிரியர்க்கும், பொதுமக்களுக்கும் இடையே விமரிசகன் இருக்கிறான். அவன் பொதுஜன வர்க்கத்தின் பிரதியாகவே பேனாவை ஓட்டுகிறான். ஆகவே தமிழை இனிமேல் தனிப்படுத்தி வைத்துக் கொள்ள முடியாது. அது மக்கள் மயமாகிவிட்டது" என்று கூறுகிறார்.

மேலும், தமிழ் உணர்ச்சி உள்ளவர்களாக அனைவரும் திகழ வேண்டுமென்பதையும் நான் தமிழன் எனது நாடு தமிழ்நாடு, எனது மொழி தமிழ் மொழி, தமிழ் மொழியாளர் எல்லாம் என் உறவினர், என் சமூகம் தமிழ்ச்சமூகம், என் சாதி தமிழ்ச் சாதி, தமிழர் நலமே என் மதம், என் கடமை தமிழ்நாட்டு ஊழியம், என் தெய்வம் தமிழணங்கு, என் மந்திரம் தமிழ், என் தோத்திரம் எந்தாய் வாழ்க என்று தமிழ் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் தலை நிமிர்ந்து கர்சிக்க வேண்டும்" என்றும் விரும்புகிறார். இந்த உணர்ச்சிகளெல்லாம் வளர்ந்து வரும்பொழுது புலவர்களும், கலைஞர்களும் உணர்ச்சியை ஏற்றுவதற்குத் தம்மால் இயன்ற பணிகளைச் செய்கின்றனர். எந்த ஒரு கவிஞர் கவிதைத் தொகுப்பு வெளியிட்டாலும், அங்கே தமிழ் "நீராரும் கடலுடுத்த" என்ற பாடலில் முதல்முறையாக வடமொழியையும் தமிழையும் ஒப்பிட்டுத் தமிழ் உயர்ந்தது என்றும் இதிலிருந்து பிறந்த இன்னின்ன மொழிகள் உயிர் வாழ்ந்த கொண்டிருக்கின்றதால் தமிழ்தான்

உயர்ந்தது என்பதை "சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே" என்று பாராட்டுகிறார். அவர் தொடங்கி வைத்த இப்பணி தொடர்வதோடு மேலும் மேலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

மேம்பாட்டிற்கும் பயன்பாட்டிற்கும் உள்ள தொடர்பு சேற்றில் நடப்பது போன்றது. ஒரு காலை நன்றாக அழுத்தி வைத்துதான் அடுத்த காலை எடுத்து வைக்க வேண்டும். அந்தக்காலை நன்றாகப் பதித்தப்பின் அடுத்த அடி எடுத்து வைக்க வேண்டும். இந்த இரண்டும் வளர்ச்சிக்குத் துணை செய்யும். ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் பயன்பாடு விரிவடைவதற்கும் மேம்பாடு என்பது அடிப்படைத் தேவை. இம்மூன்றையும் இணைத்துச் சுருங்கக்கூறின் நமது மக்களின் அரசியல் சமுதாய பொருளாதாரத் தேவைகளை நமது மொழி முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும். நாம், நமது மொழித்தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யத் தவறுமிடத்து, பூர்த்தி செய்யும் நிலையிலுள்ள மொழியை நாடத் தொடங்கி விடுவார்கள்.

மேம்பாடும் பயன்பாடும்

எந்தவோர் ஒரு இனமும் சமுதாயமும் தனது பழம்பெருமை பற்றிப் பெருமிதத்துடன் எண்ணுவதும் பேசுவதும் இயல்பு, பாரம்பரியம் மரத்தின் ஆணிவேரைப் போன்று அசையாது நிலைத்து நிற்க அதுதான் அடிப்படை. பாரம்பரியம் என்பது கழித்த நாட்களின் கணக்கன்று; அது முன்னோர் அனுபவங்களின் தொகுப்புச் செல்வத்தைப் பாதுகாத்து வைத்திருக்கும் கொள்கலனாக (container) மொழி அமையும். தான் தாங்கி நிற்கும் கருவூலத்தை வழிவழியாகப் பாதுகாத்து, நாளைய தலைமுறைக்கு விட்டுச் செல்வதால், ஓர் இனத்தின் பெருமையை அவ்வின மொழிதான் பிரதிபலிக்கிறது.

மாபெரும் நாகரிகங்கள் மகத்தான மொழியை உருவாக்கத் தவறியதுமில்லை, வரலாற்றுப் பெருமையில்லாத மக்கள் வளமிக்க மொழியை உருவாக்கியதுமில்லை. மூவாயிரம் ஆண்டுகள் பாரம்பரியம் உள்ள இந்திய நாகரிகம் கண்ட தமிழ், வடமொழி ஆகிய இரண்டு மொழிகளுக்கும் தொன்மைச் சிறப்புண்டு;

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கணம் உண்டு. கவிதை இலக்கியம் மற்றும் காப்பியங்களும் உண்டு. உலகில் பெருமையுடைய மொழிகளாகிய ஆறினுள் இந்தியா இரண்டு மொழிகள் தாயகமாகத் திகழ்கிறது. இப்பெருமை உலகில் வேறு எந்த நாட்டுக்கும் இல்லை. தமிழைப் பலநிலைகளில் ஆராய்ந்த ஏ.வி. சுப்ரமணியஅய்யர் "தமிழுக்கு இணையாக விளங்கிய சமஸ்கிருதத்தில் அகப்பாடல்கள் இருப்பினும் தமிழ்ப்பாடல்களில் உள்ள கதையழகோ, கற்பனைப் பண்புகளோ, மனோதத்துவ ஆழமோ அவற்றில் காணப்படவில்லை" என்கிறார். இது தமிழின் மேம்பாட்டினை விளங்க வைப்பதாக அமைகிறது.

புதிய கண்டுப்பிடிப்புகளுக்குரிய ஆய்வுகளுக்காக உலகின் முன்னேறிய நாடுகள் செலவிடும் தொகை 94 விழுக்காடாக அமைகிறது. இந்தியா போன்ற முன்னேறும் நாடுகள் செய்யும் செலவுகள் 6 விழுக்காடுதான். புதியன காண்பதற்கு நம் தமிழகப் பங்களிப்பு மிகமிகக் குறைவாகத்தான் அமையும் என்பது இதிலிருந்து விளங்குகிறது. அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த துறைகளில் மூலநூல் சமுதாயமாக நாம் இன்னும் மாறவில்லை. மொழி பெயர்ப்புச் சமுதாயமாகத்தான் இருந்து வருகிறோம். நம்மொழி வளமுடையது, வலிமையுடையது, ஆயின் நாம் புதியன படைப்பவர்களல்ல. அறிவியல் தொழில்நுட்பம், பொருளாதாரம், சமுதாயம், மேலாண்மை ஆகிய அனைத்திலும் நாம் மேலை நாட்டினரின் கண்டு பிடிப்புகளையே பயன்படுத்தி வருகிறோம். தேவைப்படும் வழி ஏற்றுவாழ்கிறோம். அறிவுத் துறைகளில் நாம் இன்னும் கொடுத்து வாழும் நிலைக்கு வளரவில்லை. வளர்வதே நம் குறிக்கோளாக அமைய வேண்டும். அவ்வண்ணம் அமைவதே உயிர்த்துடிப்பாகும். 'யுனெஸ்கோ' பெற்றுள்ள இருபத்தைந்து துறைகளிலும் தமிழில் சிறந்த நூல்கள் வெளிவர முயற்சி மேற்கொள்ள வேண்டும். அந்நூல்களை அவ்வத்துறை வல்லுநர்கள்தாம் எழுத இயலுமென்பதால் அவர்களனைவரும் தமிழ் அறிஞர்களாக இருக்க வாய்ப்பில்லை; தெரிந்த தமிழில் இயன்ற முறையில் எழுத அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவ்வாறு எழுதப்பட்ட நூல்கள் பயன்படுத்தபடாவிட்டால் மேலும் நூல்கள் வர வாய்ப்பில்லாது போய்விடும். இங்குதான் மேம்பாடும் பயன்பாடும் இணைந்து செயல்பட வேண்டும்.

தமிழக அரசு பல நிறுவனங்களை அமைத்து தமிழ் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது. உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,

சொற்பிறப்பு அகரமுதலித்திட்ட இயக்கம், தமிழ் வளர்ச்சி இயக்கம், திருக்குறள் ஆய்வு மையங்கள், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். தென்மொழி அறக்கட்டளை, இயல் இசை நாடக மன்றம், தொல்பொருள் ஆராய்ச்சித்துறை போன்றன அவற்றுள் சில. அரசு சார்பில் இவை அனைத்தும் தம்மால் இயன்ற பணிகளைச் செய்து வருகின்றன. ஆட்சியிலும் நீதியிலும் கல்வியிலும் வழிபாட்டிலும் தமிழன் செல்வாக்கு மேலும் வளரவேண்டும். "தமிழகத்தில் 1956–இல் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் வந்தது. அதன்பின்னர் தமிழைப் பையப் பைய ஆட்சியில் உயர்த்த முயன்றனர். ஆட்சிமொழிச் சட்டம் செயல்படுவதற்கு ஆட்சிமொழிக்குழு 1957–ல் அமைந்தது. ஆட்சிமொழிக் குழுவிற்கு உதவி செய்வதற்காக 1959–இல் தமிழ் வளர்ச்சி மன்றம் அமைக்கப்பட்டது. நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்கும் ஆணை 18–01–1982ல் பிறப்பிக்கப்பட்டது. அதே போல் 21–6–1978–இல் தமிழில் கையெழுத்து இடல் வேண்டும்" என்ற ஓர் ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. தமிழ் மேம்படுவதற்கான வாய்ப்பளிக்கப்பட்டும் முழுமையாகத் தமிழ் வளராதுள்ளது.

1963–க்குள் அந்தந்த மாநில மொழிகளில் கல்வி வழங்க வேண்டுமென்பது மைய அரசின் குறிக்கோளாக இருந்தாலும் அது நிறைவேற்றப்படவில்லை. தமிழகக் கல்வியமைச்சராக இருந்த அவினாசிலிங்கம் செட்டியார் தமிழில்தான் கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதில் ஆழ்ந்த கருத்துக் கொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து கல்வியமைச்சரான சி. சுப்பிரமணியம், சட்டசபை தமிழில் நடத்தினால் மட்டும் போதாது. சர்வகலாசாலைப் பாடங்களும் தமிழிலேயே போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால் அது என்றைக்குச் சாத்தியமாகும் என்று எனக்கே தெரியவில்லை. இதை சர்வகலாசாலை செய்ய வேண்டும். இல்லையேல் மக்கள் சார்பில் அரசாங்கம் தலையிட்டுத் தீரவேண்டிய அவசியம் ஏற்படும் என்று கூறினார் இதன் எதிரொலியாக அன்று கோவை அரசு கல்லூரியில் தமிழ் வழிக் கல்வி வழங்கப்பட்டது.

"ஒரு நாட்டில் ஆட்சிமொழியாதவற்குத் தாய்மொழி என்றும் தகுதிக்கு ஈடாக வேறு எந்தத் தகுதியும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை" என்று கூறி தமிழை ஆட்சிக்கட்டிலில் ஏற்றினார் அன்றைய முதல்வர் அண்ணா. ஆயின் தமிழ் முழுமையான ஆட்சிமொழியாகிட மொழிச்சிக்கல் காரணமாக இருந்தது. இந்தி ஒரு மொழிச்சிக்கல் என்பதெல்லாம் நாமே உருவாக்கிக் கொண்டது.

இந்தி, வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றை எதிர்ப்பதால் தமிழ் வளர்ந்துவிட முடியாது. தமிழை வளர்த்துக் கொண்டுதான் மற்றவற்றை எதிர்க்க வேண்டும். தமிழை வளர்ப்பதற்குரிய முயற்சிகளில் நாம் முழுமூச்சாகச் செயல்பட வேண்டுமேயொழிய மற்ற மொழிகளை எதிர்க்கத் தேவையில்லை. அவை தானே ஒடுங்கிவிடும். வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் தமிழகம் வேதமரபை அறிந்தும், சமண பௌத்த மதங்களின் தாக்கத்தைப் பெற்றும், வணிகத்தால் கீழை மேலை நாடுகளின் தொடர்பைப் பெற்றிருக்கிறது. அன்றைய நாளில் இடம் பெற்றிருந்த உலகச் சிந்தனை மரபுகளை அறியத் துணை செய்யும் நூல்களில் திருக்குறள் முக்கியமானது.

வேதமரபில் அமைந்த சமயச்சடங்குகளும், நம்பிக்கைகளும், மதங்களும், கடவுள்களும், நாத்திகமும் வழக்கத்திலிருந்த அக்காலத்தில் – சமயச் சார்பின்மை என்பது ஒரு கொள்கையாக இடம் பெற்றிராத நாட்களில் சமயசார்பற்ற, காலத்தை கடந்து நிற்கும் வரையறைகளைக் கொண்ட ஒரு வாழ்வியல் தத்துவத்தை, திருவள்ளுவர் முன்வைத்தார். வள்ளுவம் இந்தியதத்துவ மரபிற்குத் தமிழ் நிலம் தந்த இணையற்ற பங்களிப்பாகும். நீண்ட பண்பாட்டு வளர்ச்சிக்குச் சொந்தக்காரர்களான தமிழர்களின் ஒப்பற்ற பிரதிநிதி வள்ளுவருக்குக் குமரிமுனையில் 01–01–2000 இல் சிலை நிறுவப்பட்டது தமிழ்ப்பற்றின் உண்மையான பிரதிபலிப்பாக அமைகிறது. திருவள்ளுவரின் திருக்குறளால் மன்பதை ஒன்று என்னும் கானம் பிறந்தது. நெஞ்சம் விரிந்தது. ஞானம் மலர்ந்தது. முப்பால் அமுதுண்டதால் ஈனம் அழிந்தது. எனவே, தமிழ் மறையாம் திருக்குறளைக் கூறின் உலகம் இன்பத்தைப் பெறும். தமிழன் மேம்பாட்டைக் கவிஞர் குலோத்துங்கன் இவ்வண்ணம் சிறப்பித்துள்ளார்.

உலகின் பெரும்பாலோர் தத்தம் தாய்மொழியிலேயே அறிவியலைக் கற்கிறார்கள். தாய்மொழியில். அனைத்து நூல்களையும் துணைநூல்களையும் இயல்பாகவும் எளிதாகவும் கற்கமுடிகிறது. தாய்மொழியில் கற்றால் சிந்தனையாற்றல் நன்குபெருகி பயன்கிட்டும். அனைத்துப் பகுதியினருக்கும் தாய்மொழிவழி அறிவியல் சென்று சேர்ந்தால் ஆயிரமாயிரம் பேர் அறிவியல் அறிஞர்களாக மாறுவர். இந்தநிலை நம் தமிழகத்தில் இல்லை. மாறாக எண்ணற்ற தடைகளே உள்ளன.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அறிவியல் கல்வி மிகவும் இன்றியமையாதது. அறிவியல் முன்னேறிய நாடுகளே இன்று முன்னேற்றம் மிக்க நாடுகளாக உள்ளதால் அறிவியலைப் புறக்கணித்துவிட்டு நாம் வாழ்ந்துவிட முடியாது. அதனால் மருத்துவம், பொறியியல், அணுவியல் போன்ற துறைகளைத் தமிழில் கற்கும் நிலைவர வழிசெய்தல் வேண்டும்.

பிறநாடுகளில் அறிவியல் துறைகள் மிகவும் வேகமாக முன்னேறிட நாம் செய்ய வேண்டிய பயணம் மிகவும் நீண்டது என்பதை எண்ணி, காற்றின் வேகம் போல் செயற்பட வேண்டும். எவ்வகை மாற்றத்தையும் எதிர்கொள்ளுமாற்றல் தமிழுக்குண்டு. அறிவியலறிவு மக்கள்மயமாகி எண்ணற்ற அறிவியல் அறிஞர்கள் உருவாவர். இதனால் தமிழர்கள் நிலை உயர்ந்து தமிழும் உயரும். தமிழர் உயர்வில்லாமல் தமிழ் உயர்வில்லை என்பதைச் சிந்தித்தல் வேண்டும். கல்வி, ஆன்மீகம், தகவல் தொடர்பு, மாநில ஆட்சி, மைய ஆட்சி எனப் பல மட்டங்களிலும் மொழியின் பயன்பாடு வளர அரசியல் கட்சிகளிடையே ஒருங்கிணைந்த மொழிக்கொள்கை வேண்டும். பல மாநிலங்களில் அரசியல் கட்சிகளுக்குள் மொழிக்கொள்கையில் வேற்றுமையில்லை. தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளின் மொழிக்கொள்கை ஒன்றாகத்தான் உள்ளதெனினும், தமிழகத்தில் இவற்றின் மொழிக் கொள்கை வேறானவையாக உள்ளது. மொழிக் கொள்கையைப் பொருத்தவரை தமிழகத்து அரசியல் கட்சிகள் தங்களுக்குள் குறைந்தபட்ச செயல்திட்டம் (Common minimum program) ஒன்றைக் காண வேண்டும்.

மொழிக்கொள்கையில் தெளியவேண்டுவது நமது கடமையாகும் என்பதைக் கூறாமல் கூறிச் செல்கிறார். தெளிந்தால் மொழியும் நாடும் நலம்பெறும். மத்திய அரசு நிறுவனங்கள் நாடு முழுவதும் அதாவது மாநில, மாவட்ட பஞ்சாயத்துகளில் ஆங்கிலம், இந்தி ஆகிய இருமொழிகள் மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. மாநில மக்களுக்குப் புரியாததொரு மொழியில் மத்திய அரசின் அலுவல்கள் நடத்துவது மக்களாட்சித் தத்துவத்திற்கு ஏற்றதல்ல.

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி :

ஆசிரியர், செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை–625001.
தொலைபேசி : 0452-6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.
தொலைபேசி : (0452) 6575615

அச்சிடுவோர் : தனம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1.

செந்தமிழ்க் கல்லூரி
மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசிய தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் தேசிய தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 1.
தொலைபேசி 0452-2343707. நிகரி 0452-4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன.

இரா. அழகுமலை	**முனைவர் க. சின்னப்பா**	**இரா. குருசாமி**
செயலாளர்	முதல்வர்	செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்	செந்தமிழ்க் கல்லூரி	செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V.Govindarajan, published by R.ALAGUMALAI on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West masi Street, Madurai-1, and published at 54, Tamil sangam road, Madurai. Editor R. ALAGUMALAI.